FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348070

1. District : திருவண்ணாமலை PS: ஆரணி நகரம் Year: 2025 FIR No.: 13/ac/2025 Date: 14.07.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் 2012 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: இந்திய நீதி சட்டம் 2023 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 08.07.2025 Date to : 10.07.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் சுமார் 14.45 மணி நாள் வரை சுமார் 18.10 மணி

Time Period : Time from : 09.07.2025 Time to : 12.07.2025
நேர அளவு நேரம் முதல் சுமார் 16.20 மணி நேரம் வரை சுமார் 14.00 மணி

(b) Information Received at PS. Date : 14.07.2025 Time : 09.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 50 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : ஏஜென்சி மாநகராட்சி அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி திருவண்ணாமலை மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. மாரி (b) Father's/ Husband's Name : முனுசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 36/2025 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழிற்சாலை (g) Address : கு.எண் 5/751-13, N.R. நகர், 1வது தெரு
தொழில் நிரந்தரம் முகவரி சின்ன கலசபாக்கம், சிப்காட் போஸ்ட், ஏஜென்சி நாயுங்கா
திருவண்ணாமலை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ரஜினி, மால் கலைஞர், ஏஜென்சி மாநகராட்சி அலுவலகம்
திருவண்ணாமலை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : -
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/07/2025

14/07/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.07.2025 at 13.30 மணி

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்
பூ.த.க.பாரி
கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 13/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 14.07.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், சிப்காட் அஞ்சல், சின்ன எலசகிரி கிராமத்தை சேர்ந்த முனுசாமி மகன் M.பிரபு என்பவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் M.பிரபு, (36/25), த/பெ முனுசாமி, க.எண். 5/751-13, R.R.நகர் 1 வது தெரு, சின்ன எலசகிரி, சிப்காட் போஸ்ட், ஓசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு துறை, கிருஷ்ணகிரி. ஐயா, நான் மேலே சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் +2 வரை படித்துள்ளேன். நான் ஓசூர் காமராஜர் நகரில் ஸ்ரீ S.P இன்டஸ்டிரிஸ் என்ற மெயரில் ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள் தயார் செய்யும் ஒரு சிறிய நிறுவனத்தை வைத்து நடத்திவருகிறேன். மேலும், எனது வீடு அமைந்திருக்கும் RR நகர் பகுதியின் RR நகர் குடியிருப்போர் நல சங்கத்தின் தலைவராகவும் இருந்துவருகிறேன். எங்கள் பகுதியில் குடியிருக்கும் குடும்பத்தார்களின் வீடு மற்றும் அரசாங்க அலுவலகம் தொடர்பான வேலைகளுக்காக சம்மந்தப்பட்ட நபர்கள் எங்களது நல சங்கத்தை அணுகும்போது, மேற்படி பணிகளை முன்னின்று செய்துகொடுப்போம். மேலும் எங்களது பகுதியில் கதவு எண் 5/373-4A, 10வது குறுக்கு தெரு, RR நகர், சின்ன எலசகிரி, சிப்காட் போஸ்ட், ஓசூர் என்ற முகவரியில் குடியிருக்கும் திரு.மாது என்பவர் எங்களது குடியிருப்போர் நல சங்கத்தில் பொருளாளராக இருந்துவருகிறார். திரு.மாது அவர்கள் அவரது மனைவி திருமதி.துளசிமணி என்பவரது பெயரில் உள்ள வீட்டிற்கு வீட்டுவரி இரசீது வாங்கவேண்டும் என்றும் தனக்கு சக்கரை நோய் உள்ள காரணத்தால் அந்த பணியினை ஓசூர் மாநகராட்சிக்கு சென்று முடித்துக்கொடுக்கும்படி என்னிடம் கேட்டுக்கொண்டர். திரு.மாது அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருக்கு

அவ்வப்போது அவர் கேட்கும் சிறு சிறு வேலைகளை நான் செய்துகொடுப்பேன். அதன்பேரில் நானும் கடந்த 04.07.2025 ஆம் தேதி ஓசூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று அங்கு பில்கலெக்டராக வேலைசெய்யும் திரு.ரஜினி என்பவரை சந்தித்து திருமதி.துளசிமணி அவர்களது வீட்டிற்கு வரி விதிப்பது குறித்து கேட்டேன். அதற்கு அவர் மேற்படி வீட்டின் டாக்குமெண்ட் நகல்கள் மற்றும் சம்மந்தப்பட்ட இதர டாக்குமெண்டுகளை தயார்செய்து வைக்குமாறும், நான் வந்து இடத்தை பார்வையிட்டபிறகு மற்றதை பேசிக்கொள்ளலாம் என்றும் சொன்னார். பிறகு நான் வீட்டிற்கு வந்து அவர் கேட்டதுபோல் திருமதி.துளசிமணி அவர்களது பெயரில் உள்ள வீட்டிற்கான டாக்குமெண்டுகளை ஜெராக்ஸ் எடுத்து வைத்துக்கொண்டேன். அதன்பிறகு 08.07.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு 8682834500 என்ற எனது மொபைல் எண்ணில் இருந்து 8667449148 என்ற பில் கலெக்டர் திரு.ரஜினியுடைய மொபைல் எண்ணிற்கு போன்செய்து துளசிமணி வீட்டின் டாக்குமெண்டுகள் தயாராக உள்ளது என்று பில் கலெக்டர் திரு.ரஜினியிடம் சொன்னேன். அதற்கு அவர் மதியம் 02.00 மணிக்கு மேல் வருவதாக தெரிவித்தார். அன்று மதியம் சுமார் 02.20 மணிக்கு பில் கலெக்டர் ரஜினி எனக்கு போன் செய்து தான் வந்துகொண்டிருப்பதாகவும், துளசிமணி வீட்டிற்கு வந்துவிடுமாறு சொன்னார். நான் என்னிடமிருந்த டாக்குமெண்டுகளை எடுத்துக்கொண்டு மதியம் சுமார் 02.45 மணிக்கு துளசிமணி அவர்களின் வீட்டிற்கு சென்றேன். அங்கு பில் கலெக்டர் ரஜினி இருந்தார். அவரிடம் நான் வைத்திருந்த டாக்குமெண்டுகளை கொடுத்தேன். அதை அவர் வாங்கி பார்த்தும், வீட்டினை கள ஆய்வு மேற்கொண்டார். அதன்பிறகு, பில் கலெக்டர் ரஜினி என்னிடம் மேற்படி வீட்டிற்கு வரிஇரசீது போடவேண்டும் என்றால் எனக்கு தனியாக பணம் ரூ.75,000/- கொடுக்க வேண்டும் என்றும், அப்போது தான் வரி இரசீது போட்டுதருவேன் என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் தரமுடியாது என்றும், வீட்டின் உரிமையாளர் திரு.மாது அவர்களிடம் கலந்து பேசிவிட்டு சொல்வதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். அன்று இரவே திரு.மாது அவர்களிடம் வீட்டு வரி இரசீது கொடுப்பதற்காக பில் கலெக்டர் ரஜினி பணம் ரூ.75,000/- லஞ்சமாக கேட்டது பற்றி சொன்னேன். அதற்கு அவர் லஞ்சமாக பணம் தரவேண்டாம் என்று தெரிவித்தார். அதன்பிறகு, நான் 09.07.2025 ஆம் தேதி மாலை சுமார் 04.20 மணிக்கு பில் கலெக்டர் ரஜினிக்கு போன்செய்து வீட்டுவரி இரசீது பற்றி கேட்டேன். அதற்கு

அவர் நான் கேட்ட பணம் ரூ.75,000/-ஐ எனக்கு தனியாக தந்தால் தான் வரி இரசீது போட்டுதர ஏற்பாடு செய்யமுடியும் என்று திட்டவட்டமாக தெரிவித்தார். அதன்பிறகு நான் திரு.மாது அவர்களிடம் பில் கலெக்டர் ரஜினி பணம் கொடுத்தால்தான் வீட்டுவரி இரசீது தர ஏற்பாடு செய்யமுடியும் என்று கூறியதை தெரிவித்தேன். அதற்கு மாது அவர்கள் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்யமுடியாது என்று சொன்னார். மறுநாள் 10.07.2025 ஆம் தேதி மாலை சுமார் 06.10 மணிக்கு பில் கலெக்டர் ரஜினி எனக்கு போன் செய்து வீட்டுவரி இரசீது வழங்க ஏற்பாடு செய்வதற்கு தான் கேட்ட பணம் ரெடியா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் வீட்டு உரிமையாளரான திரு.மாது அவர்களால் தரமுடியாது என்று செல்லிவிட்டார் என்ற விவரத்தினை அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் பணம் ரூ.75,000/- கொடுத்தால் மட்டுமே வீட்டுவரி இரசீது வழங்க ஏற்பாடு செய்யமுடியும் என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். மேலும், வீட்டுவரி இரசீது பெறுவதற்கு Online-ல் விண்ணப்பித்துவிடுமாறும் என்னிடம் கூறினார். அதன்பேரில் நான் 11.07.2025 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் மக்கள் கணினி மையத்திற்கு சென்று திருமதி.துளசிமணி அவர்களது பெயரில் காலியிடம் மற்றும் வீட்டுவரி இரசீது கேட்டு Online மூலம் விண்ணப்பித்தேன். அதன்பிறகு நான் 12.07.2025 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு பில் கலெக்டர் ரஜினிக்கு நான் போன்செய்தேன். ஆனால் அவர் போனை எடுக்கவில்லை. பிறகு நான் எனது சொந்த வேலையாக பெங்களூர் சென்றேன். அப்போது மதியம் சுமார் 12.50 மணிக்கு பில் கலெக்டர் ரஜினி எனக்கு போன் செய்தார். நான் வண்டியில் சென்றுகொண்டிருந்தால் போனை எடுக்க முடியவில்லை. நான் பெங்களூர் சென்றபிறகு மதியம் சுமார் 01.00 மணிக்கு பில் கலெக்டர் ரஜினிக்கு போன் செய்தேன். அவர் போனை எடுத்து தான் சற்று வேலையாக உள்ளதாகவும், பிறகு போன் செய்யுமாறும் சொன்னார். பிறகு நான் ஒருமணிநேரம் கழித்து மதியம் சுமார் 02.00 மணிக்கு பில் கலெக்டர் ரஜினி அவர்களுக்கு போன் செய்தேன். அப்போது அவர் வீட்டுவரி இரசீது வழங்க ஏற்பாடு செய்வதற்கு நான் கேட்ட பணம் ரெடியா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் வீட்டு உரிமையாளரான திரு.மாது அவர்களால் தரமுடியாது என்று செல்லிவிட்டார் என்ற விவரத்தினை அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் முதல் தவணையாக ரூ.25,000/- கொடுங்கள், நான் அந்த பணத்தை தர வேண்டியவர்களுக்கு கொடுத்து வீட்டுவரி இரசீதினை வழங்க ஏற்பாடு

செய்கிறேன் என்றும், மீதி பணம் ரூ.50,000/- வேலை முடிந்தபிறகு தாருங்கள் என்றும், பணத்தை ரெடிசெய்துகொண்டு என்னை எப்போது வேண்டுமானாலும் வந்து பார்க்குமாறும் திட்டவட்டமாக சொல்லிவிட்டார். பிறகு, பில் கலெக்டர் ரஜினி பணம் கேட்ட விவரத்தினை நான் திரு.மாது அவர்களிடம் நான் சொன்னேன். அதற்கு அவர் பில் கலெக்டர் ரஜினிக்கு பணம் எதுவும் லஞ்சமாக கொடுக்க தேவையில்லை என்றும், எனக்கு உடல்நிலை சரியில்லாததால் எனக்கு பதிலாக நீங்கள் கிருஷ்ணகிரி லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுங்கள் என்று என்னிடம் சொன்னார். எனக்கும் பில் கலெக்டர் ரஜினி அவர்களுக்கு அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.25,000/- கொடுத்து திரு.மாது அவர்களது வேலையை முடிக்க விருப்பமில்லை. அதனால் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.25,000/-த்துடன் அவரை சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட ஓசூர் மாநகராட்சியில் பணிபுரியும் பில் கலெக்டர் ரஜினி மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) M.பிரபு 14.07.2025.

Sir, a computer typed complainant was received by me on 14.07.2025 at 09.00 hrs. Further a confidential verification on the general reputation of the accused Tr.Rajini has been made and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.13/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 14.07.2025 at 11.00 hrs against the accused Tr.Rajini, Bill Collector, Hosur Corporation. The original FIR along with this complaint was sent to the Hon'ble Court of Principal District/Session Judge, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

14/07/2025

Inspector of police
Vigilance Anti Corruption
Krishnagiri Unit.